NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 6 March 2018

# ‘என்யுஎஸ்’ மாணவர் சேர்க்கை 20 ஆண்டுகள் செல்லுபடியாகும்



வேகமாக மாறிவரும் பொருளியல் சூழலில் பயிற்சியும் திறன்களின் மேம்பாடும் அதிமுக்கியத்துவம் பெறுவதால், மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் பல்கலைக் கழகப் படிப்புக்குப் பிறகு, அது கற்றல் பயணத்தின் இறுதி என்று இனி சொல்லிவிட முடியாது.

பல்கலைக்கழகங்களும் இதர உயர்கல்வி நிலையங்களும் வயது வந்தோர் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து செயல்படும் என்றும் அவர்கள் தங்களின் முன்னாள் மாணவர் களுக்கு மேம்பட்ட ஆதரவு கொடுக்கும் என்றும் கல்வி அமைச்சர் (உயர்கல்வி, திறன் கள்) ஓங் யி காங் (படம்) தெரி வித்தார்.

இத்திட்டத்தின் முதற்கட்ட மாக, சிங்கப்பூர் தேசிய பல்க லைக்கழகம் (என்யுஎஸ்) மாண வர் ஒருவர் தனது உயர்கல்வி நிலையத்தில் சேர்ந்ததிலிருந்து 20 ஆண்டுகளுக்கு நீடிக்கக் கூடிய அந்த மாணவரின் வாழ்க் கைத்தொழில் பற்றியும் அவரது கற்றல் பயணம் பற்றியும் திட்டங் கள் வகுக்கும் என்றும் அமைச்சர் விளக்கினார்.

‘என்யுஎஸ்’ வாழ்நாள் கல்வி கற்பவர்கள் என்று அழைக்கப் படும் இத்திட்டம் மூலம் என்யுஎஸின் 288,600 முன்னாள் மாணவர்களும் தொடர் கல்வி மற்றும் பயிற்சி வகுப்புகளுக்குத் தகுதி பெறுவார்கள்.

மேலும் தங்கள் பட்டத்தின் நிலையை உயர்த்தும் வகையில் பட்டதாரி டிப்ளோமா, இளநிலை அல்லது முதுநிலை கல்வியை தேர்வு செய்யலாம்.

வரும் ஆகஸ்ட் மாதத்தில் 500 பயிற்சி திட்டங்கள் முதல் தொகுதியாகத் தொடங்கப்படும். அதன் பின்னர் கட்டங்கட்டமாக மேலும் பல பயிற்சி திட்டங்கள் சேர்த்துகொள்ளப்படும்.

பயிற்சியில் சேர விரும்பும் தனது முன்னாள் மாணவர்க ளுக்கு என்யுஎஸ் மெய்நிகர் பற் றுச்சீட்டுகள் வழங்கும். அதைப் பயன்படுத்தி அவர்கள் தாங்கள் தேர்வு செய்யும் தொடர் கல்வி மற்றும் பயிற்சி வகுப்புகளின் கட்டணங்களில் கழிவு பெறலாம்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.